மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றி யாரிடம் அறிவித்தார்கள் என்கிற தகவல் என்னிடம் இல்லை. அதுபற்றி அவர்கள் பேசியதைப்பற்றி கனம் உறுப்பினர் அவர்களிடம் தகவல் இருந்தால் அளிக்கலாம்.

* 215 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether footwear production is to be undertaken in this State under Indo-Italian auspices; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இந்திய அரசின் ஒப்புதல் பெற்று இத்தாலிய நாட்டு நிறுவனம் ஒன்றின் கூட்டுடன், தனியார் துறையில் இந்தோ-இத்தாலிய பாத அணி உற்பத்தி நிறுவனம் ஒன்று சென்னையில் பாத அணிகள் செய்வதை மேற்கொண்டுள்ள இந்நிறுவனத்தின் அங்கிகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 10 லட்சம்; செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 5.7 லட்சம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்கு விண்ணமங்கலத்திலுள்ள தொழிற்சாலையினுடைய தோல் பொருட்கள் பயன் படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டில் ஏராளமாக இதற்குரிய மூலப் பொருட்கள் கிடைக்கின்றன. நம்முடைய யூனிட்டிலிருந்துதான் கொடுக்கவேண்டும் என்று இல்லை. நம்முடைய யூனிட்டிலிருந்து வெளி நாட்டுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்வதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : செருப்பு, பூட்ஸ், போன்ற (ஃபுட்-வேர்) காலணிகள் செய்ய இந்தியாவிலேயே தனியார் துறையிலும் குடிசைத் தொழில்களிலும் பெரிய தொழிற்சாலைகளெல்லாம் இருக்கும்போது இம் மாதிரியாக இத்தாலியக் கம்பெனியோடு சேர்ந்து செய்ய வேண்டிய அவசியம் எப்படி வந்தது என்று கூறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைப்பற்றி நாம் பரிசீலித்தோம். நம்முடைய தமிழ்நாட்டில் ஏராளமான மூலப் பொருட்கள் இதற்காக இருக் கின்றன. ஆனால், வெளிநாட்டுக்கு நாம் ஏற்றுமதி செய்யும்போது அவர் களுக்குத் தேவையான டிசைன்கள், தரம் (க்வாலிடி) முதலியவை அமைய வேண்டும் என்ற காரணத்தால் அவர்களோடு இப்படிப்பட்ட கூட்டு முயற்சி எடுத்தால் நம்முடைய பொருட்கள் வெளிநாடுகளில் விற்பனை ஆவதற்கு ஏதுவாக இருக்கும். அவர்களுடைய தரம் (க்வாலிடி) எந்த அளவுக்குத் தேவை என்பதையும் முடிவு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தத் தொழிற்சாலை வெறும் பத்து லட்ச ரூபாய் மூலதனத்தோடு துவக்கப்படுவதால் சிறிய தொழிற்சாலையாகத்தான் இருக்கக்கூடும். வெளிநாட்டு ஏற்றுமதி நிலையையும் ஆராய்ந்து பெரிய தொழிற்சாலையாக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வேறுசில நாடுகளிலும் இதுபோன்ற தொழிற்சாலைகளை அமைக்க முன்வந்திருக்கிறார்கள். அந்த நாடுகளில் அந்தத்

தொழிற்சாலைகளை அமைக்கும்போது அதிக அளவில் அமைக்கலாம் என்று நாம் இருக்கிறோம். நம்முடைய அரசுத் துறையில்கூட, விண்ணமங்கலத்திலேயே கிடைக்கின்ற மூலப் பொருட்களைக் கொண்டு இதுபோன்று லெதர் குட்ஸ் செய்யலாமா, அதற்கு வெளிநாட்டு உதவிகளைப் பெறலாமா என்ற முயற்சிகளையும் நாம் எடுத்து வருகிறோம்.

Leather Factory at Wallajapet

* 216 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Inustries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a leather factory at Wallajapet in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இம் மாநிலத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்பதை அரசு உணருகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : லெதர் பாக்டரிகள்—தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஏராளமாகத் தமிழ்நாட்டில் இருக்கின்றன. நாமும் விண்ணமங்கலத்தில் வைத்திருக்கிறோம். லெதர் பாக்டரியை வாலாஜாவில் வைப்பதைப்பற்றித்தான் நான் சொன்னேன்.

திரு. கே. ஏ. வகாப் : வாலாஜாபேட்டையிலும் அதன் அருகில் இராணிப்பேட்டையிலும் ஏராளமான தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்றன. அவை சில நேரங்களில் நவீன முறையில் இல்லாமையினால் அங்கே சுகாதாரக் கேடான முறையில் இருக்கின்றன. ஆகவே, நவீன முறையில் தொழில் கூட்டுறவுத் துறையில் ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்க இந்த அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவாளர்கள் முயற்சித்தால் உதவி செய்யலாம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய நீதிமன்றங்கள்

* 217 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராஜபாளையத்தில் ஒரு சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டும், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு சப்-கோர்ட்டும் நிறுவும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) இம்மாவட்டத்தில், நடப்பு ஆண்டில் வேறு எந்தெந்த இடங்களில் நீதி மன்றங்களை நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இராஜபாளையத்தில் ஒரு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு நிறுவுவதற்கான பிரேரணை இம்மாநிலத்திலுள்ள சிவில், கிரிமினல் நீதி மன்றங்களின் அதிகார வரம்பை நிர்ணயிப்பதற்காக